Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 258

சனிக்கிழமை
10 ஓகஸ்ட் 2024

ஆடி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


முச்சந்தி முரளி




## வெளிநாட்டு மோசடி தொடர்பில் புதிய வலைப்பின்னல் சிக்கியது

### பொலிஸாரின் தீவிர விசாரணையில் அதிர்ச்சித் தகவல்கள் அம்பலம்

யாழ்ப்பாணம், ஓக. 10

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி மோசடி செய்த வழக்கில், சந்தேக நபர்கள் சிலர் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவினரால் அண்மையில் கைதுசெய்யப்பட்ட நிலையில், மேலதிக விசாரணையில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இதுபோன்ற பல்வேறு மோசடிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவந்தமை தெரியவந்துள்ளது.

ஆலோசனைக் கட்டணங்கள் தவிர வேறு எந்தக் கட்டணமும் இன்றி வெளிநாட்டுக்கு அனுப்பப்படும் என்று சமூக வலைத்தளத் 11

## அதிவேகப் பயணம் பறித்தது உயிரை!

### ஆனையிறவில் சோகம்



கிளிநொச்சி, ஓக. 10

கிளிநொச்சி - ஆனையிறவுப் பகுதியில் இரண்டு மோட்டார்சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

ஆனையிறவில் உள்ள இராணுவத்தினரின் சோதனைச் சாவடியிலேயே இந்த விபத்து 04



## பொன்சேகா பதவிவிலகல்

கொழும்பு, ஓக. 10

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியை இராஜினாமா செய்வதாக அந்தக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்சேகா அறிவித்துள்ளார். 04

# தமிழ்த் தேசியக் குறியீடே தமிழ்ப் பொதுவேட்பாளர்

### அரியநேந்திரன் தெளிவுபடுத்தல்


**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 10**

**'தமிழ்ப் பொதுவேட்பாளர்' எனப்படுவது, தமிழ்த் தேசியக் கொள்கையின் குறியீடே - இவ்வாறு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ள, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான பாக்கியசெல்வம் அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.** 11

## விபத்தில் காயமடைந்த முதியவர் உயிரிழப்பு

மன்னார், ஓக. 10

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் 04



## ஏழைகளின் பசிக்கு கட்சிகள் கிடையாது

### ஜனாதிபதி ரணில் நேற்று உரை

கொழும்பு, ஓக. 10

ஏழைகளின் பசிக்குக் கட்சிகள் கிடையாது. ஜனாதிபதித் தேர்தலில் நான் கட்சி சார்பற்ற வேட்பாளராகப் போட்டியிடுவதற்குக் காரணமும் அதுவே என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார். 11

பொன்னாலை

## வரதராஜப்பெருமாளுக்கு நாளை ஏறுகிறது கொடி

யாழ்ப்பாணம், ஓக. 10

வரலாற்றுப் பழமை வாய்ந்த பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் இவ்வருட ஆவணி மகோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து வரலட்சுமி விரதம் எதிர்வரும் 16ஆம் திகதியும், தேர் உற்சவமானது எதிர்வரும் 27ஆம் திகதி 04

## மனுஷ, ஹரினை நீக்கியமை தவறில்லை

### உயர்நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஓக. 10

அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரை கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்ட தீர்மானம் சட்டரீதியானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இருவரும் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் 04

## அமைச்சுப் பதவியை துறந்தார் ஹரின்!

### வந்தவேலை முடிந்ததாம்



கொழும்பு, ஓக. 10

சுற்றுலாத்துறை அமைச்சராகச் செயற்பட்டுவந்த ஹரின் பெர்னாண்டோ அந்தப் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு வந்த ஹரின், ஐக்கிய மக்கள் சக்தியின் முடிவுக்கு மாறாக ஜனாதிபதி ரணிலை 11

### மக்களாணை கோருவதற்கு

## ராஜபக்சக்களுக்கு உரிமை இல்லை!

**சம்பிக்க சாட்டை**

கொழும்பு, ஓக. 10

பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்சக்கள் பொறுப்புக்கூறவேண்டும் என உயர்நீதிமன்றம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. ஆகவே மீண்டும் மக்களாணை கோருவதற்கு ராஜபக்சக் 04

### மாகாணசபைத் தேர்தல் திருத்தம்

## செப்ரெம்பர் 3 இல் 3 ஆவது வாசிப்பு!

கொழும்பு, ஓக. 10

மாகாணசபைத் தேர்தல் திருத்தச்சட்ட வரைவில் அவசியமான திருத்தங்கள் நேற்று வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டதையடுத்து, இந்தச் சட்டவரைவு மீதான மூன்றாம் வாசிப்பு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி 04

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதான கட்சிகள் பரப்புரைப் போர்



## அடுத்தவாரம் அனல்பறப்பு

**கொழும்பு, ஓக.10**
**ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைப் போரை எதிர்வரும் வாரம் முதல் முழு வீச்சுடன் முன்னெடுப்பதற்கு பிரதான கட்சிகள் திட்டமிட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவை தாக்கல் செய்த பின்னர், அன்றைய தினம் பிரதான கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்கள் ஆன்மீக வழிபாடுகளில் ஈடுபடவுள்ளனர்.

மறுநாள் 16 ஆம் திகதி முதல் தேர்தல் பரப்புரை நடவடிக்கை முன்னெடுக்கப் படவுள்ளது.

சஜித் பிரேமதாஸவின் முதலாவது பிரதான தேர்தல் பரப்புரைக் கூட்டம் குருணாகலையில் நடைபெறவுள்ளது. ஐக்கிய மக்கள் கூட்டணியில் பங்காளிக்கட்சித் தலைவர்களும் இதில் பங்கேற்கவுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலை வெற்றிகொள்வதற்கு சஜித் தலைமையில் இவ்வாறு 100 பிரதான கூட்டங்கள் 25 மாவட்டங்களிலும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவின் முதலாவது பிரதான தேர்தல் பரப்புரைக் கூட்டம் அநுராதபுரத்தில் நடைபெறும் என தெரியவருகின்றது. தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்கும் கூட்டம் தொடர்பான அறிவித்தல்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது என்றும் அரசியல் களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-44)

## அஞ்சல்மூல வாக்களிப்பு விண்ணப்பகாலம் நிறைவு

கொழும்பு, ஓக. 10
ஜனாதிபதித் தேர்தலின் அஞ்சல்மூல வாக்களிப்புக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான, கால அவகாசம் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ளது.

எந்தவொரு காரணத்துக்காகவும் அஞ்சல்மூல வாக்களிப்புக்கான விண்ணப்ப காலம் மீண்டும் நீடிக்கப்படமாட்டாது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ச-இ)



## பிரிந்தோர் வாருங்கள்

### மஹிந்த அழைப்பு

கொழும்பு, ஓக. 10
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை விட்டுப் பிரிந்து சென்றவர்களை மீண்டும் கட்சியில் ஒன்றிணையுமாறு பொதுஜன பெரமுனவின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாம் நிச்சயமாக வெற்றி பெறுவோம். நமக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகள், வெறுப்புகளை ஒதுக்கி வைத்துவிட்டு கட்சிக்காக நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## ஐ.தே.க. ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 10
ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவரைக் களமிறக்காமல் இருப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் மாலை கூடியது. இதன்போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சுயாதீன வேட்பாளராகக் களமிறங்கவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. (ச-44)

## சில சின்னங்கள் பட்டியலில் நீக்கம்

கொழும்பு, ஓக. 10
சுயேட்சையான ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்படும்சின்னங்களின்பட்டியலிலிருந்து சின்னங்கள் சிலவற்றை தேர்தல்கள் ஆணைக்குழு நீக்கியுள்ளது.

அதன்படி தர்மசங்கடத்தை ஏற்படுத்தக்கூடிய மற்றும் மத உணர்வைப் புண்படுத்தும் பன்றி மற்றும் நாய் ஆகிய இரண்டு சின்னங்கள் நீக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## தேசிய அடையாள அட்டை தற்காலிகமாக ஏற்பாடு

கொழும்பு, ஓக. 10
வாக்களிக்கும்போது தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் என இனங்காணப்பட்ட சுமார் ஒன்றரை இலட்சம் பேருக்கு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் என இனங்காணப்பட்டவர்களில், தோட்ட மக்களும், இருபாலின சமூகத்தவர்களும் அடங்குகின்றனர்.

அடையாள அட்டை இல்லாத மக்களுக்கு எவ்வித இடையூறும் இன்றி தற்காலிக அடையாள அட்டை வழங்குவதற்கு அனைத்து கிராம அதிகாரிகளும் தயாராக உள்ளனர் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)



## பவித்ராவும் ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 10
பொதுஜன பெரமுனக் கட்சியின் பொருளாளரான அமைச்சர் பவித்ரா தேவி வன்னியாராச்சி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். பெரமுனக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட ஆதரவாளர்களில் பெரும்பான்மையானோர் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே தான் இந்த முடிவை எடுத்தார் என அவர் கூறியுள்ளார். இதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்தி கட்சித் தலைவரான மஹிந்த ராஜபக்சவுக்கு அவர் கடிதமொன்றை அனுப்பியுள்ளார். (ஒ-44)

## அரசியல் ஒப்பந்தங்களில் ரணில் தீவிர நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 10
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஜனாதிபதியின் விசேட பிரதிநிதிகள் பல அரசியல் ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருவதாக நம்பகமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் தேர்தல் செயற்குழுக் கூட்டங்கள் கடந்த சில நாள்களாக பத்தரமுல்லயில் இடம்பெற்றுள்ளது.

அங்குள்ள விடுதியொன்றின் தனி இரகசிய அறையில் ஜனாதிபதியின் விசேட பிரதிநிதிகள் பல அரசியல் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளனர்.

இதில் இரத்தினபுரி, கேகாலை மற்றும் களுத்துறையை பிரதிநித்துவப்படுத்தும் 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## தேர்தல் மீறல்கள் 157

கொழும்பு, ஓக. 10
ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரையில் 157 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு இதுவரை 102 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அத்துடன், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு இதுவரையில் 55 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## நாமலுக்கு ஆதரவளிப்போர் அரசிலிருந்து விலகல்

கொழும்பு, ஓக. 10
நாமல் ராஜபக்ச ஆதரவு அணியிலுள்ள எட்டு இராஜாங்க அமைச்சர்கள் தமது பதவிகளைத் துறக்கவுள்ளனர் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. ஜனாதிபதியால் தமது பதவிகள் பறிக்கப்படுவதற்கு முன்னர் தாமாக விலகுவதற்கு அவர்கள் திட்ட மிட்டுள்ளனர். இதன்படி இராஜாங்க அமைச்சர்களான டீ.வீ. சானக, தேனுக விதானகே, சசீந்திர ராஜபக்ச, அசோக அபேசிங்க, மொஹான் டி சில்வா, இந்திக்க அனுருத்த, பிரசன்ன ரணவீர மற்றும் சிறிபால கம்லத் ஆகியோரே இவ்வாறு பதவி விலகவுள்ள னர். இது தொடர்பில் அவர்கள் பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைமைத்துவத்துக்குத் தெரியப்ப டுத்தியுள்ளனர் என அறியமுடிகின்றது. (ஒ-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீனவர்களின் அத்துமீறல்: தமிழக அரசு அசமந்தம்

கடற்றொழில் இணையச் செயலர் சாடல்


**மன்னார், ஓக. 10**

**இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பினுள் வருவதைத் தடுக்க அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்கின்றோம். கடற்படைக்கும் அழுத்தத்தை கொடுக்கின்றோம். எனினும் அவர்களின் அத்துமீறிய வருகையை நிறுத்தமுடியாத நிலையில் இருக்கிறோம். இவ்விடயத்தில் தமிழக அரசு அசமந்தப் போக்குடன் செயற்படுகின்றது என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம். ஆலம் தெரிவித்துள்ளார்.**

மன்னாரில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-


4 படகுகளில் 35 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மன்னார் தெற்கு கடலில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர். நாங்கள் தொடர்ச்சியாக முன்வைக்கின்ற கோரிக்கைகளை உதாசீனம் செய்கின்ற வகையில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கையும் கைதும் இடம்பெறுகின்றது.

வடபகுதிக் கடற்பரப்பில் இவ்வாறான அத்துமீறலும், தடை செய்யப்பட்ட தொழில் முறைகளையும் செய்யாதீர்கள். நாங்கள் உங்களுடன் பேச விரும்புகின்றோம். அதற்கு முன்னர் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வோம் என்று நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தாலும், அக்கோரிக்கையை இந்திய மீனவர்கள் உதாசீனம் செய்து வருகின்றனர் - என்றார். (ஒ-56)



அனலைதீவு மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் ஆடிப்பூர விழா அண்மையில் நடைபெற்றது. (ரி-9)

# புத்தகத் திருவிழா கோலாகல ஆரம்பம்




யாழ்ப்பாணம், ஓக.10

யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்றுறை மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் ஆரம்பமானது. யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்றுறை மன்றத்தின் தலைவர் கலாநிதி.வாசுதேவன் ராசையா தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்தப் புத்தகத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியுடன் நிறைவுபெறவுள்ளது. (ச-66,27)

# வாக்குகள் இம்முறை சரிவே

பெரமுன ஒப்புக்கொள்கிறது

கொழும்பு, ஓக. 10

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சிக்கு கணிசமான அளவு வாக்குகள் இம்முறை குறைவடையும் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார்.

பொதுஜன பெரமுனக் கட்சியின் வேட்பாளராக நாமல் ராஜபக்ச நியமிக்கப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எங்களுக்கு ஒரு கட்சியாக உறுதியாக 69 இலட்சம் வாக்குகள் தற்போது இல்லை, அதிகளவிலான வாக்குகள் விலகிச் சென்றுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியை விட்டு ரணில் தரப்புக்குச் சென்றவர்களுக்கு தற்போது பயம் ஏற்பட்டிருக்கும். நாமல் ராஜபக்சவை நியமித்த பின்னர் கட்சி தாவியவர்கள் மறுபடியும் பொதுஜன பெரமுனவுடன் இணைய வாய்ப்புண்டு என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)




## அமைதியினை எப்போ நீ தருவாய்

நல்லைநகர் வாழ்கின்ற நாயகனே முருகா
நானுந்தன் நாள்களையே நம்பியுள்ளேன் இங்கே
எல்லையில்லா அமைதியினை எப்போ நீ தருவாய்
எம்மை வாழ வைக்க எப்போ நீ வருவாய்...?

## முருகன் அழைப்பு

தோன்றி நின்று தோற்றம் காட்டி
தூங்கா நிலவில் தாகம் காட்டி
நான்கு தமிழுக்கும் நாதம் கோர்ந்து
நல்லூர் வாழும் முருகனை நாடிடு

நா.ஸ்ரீ கிருஷ்ணா



# மணலுடன் டிப்பர் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 10

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்கிளப்பில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற ஐந்து டிப்பர் வாகனங்களை சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் ஐவரைக் கைது செய்துள்ளனர். நேற்றுமுன்தினம் இரண்டு டிப்பர் வாகனங்களும், நேற்றைய தினம் 3 டிப்பர் வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஒ-27)

# எல்லைமீறி நுழைந்த 35 இந்திய மீனவர் கைது

கொழும்பு, ஓக. 10

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிக் கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 35 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் பயணித்த 4 படகுகளும் கைப்பற்றப்பட்டதாகக் கடற்படைப் பேச்சாளர் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

மன்னார் தீவை அண்மித்த தென் கடல் பகுதியில் வைத்து குறித்த இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# உணவுப்பொருள்கள் சதொசவில் விலைகுறைப்பு

கொழும்பு, ஓக. 10

சதொச நிறுவனம் சில அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலையைக் குறைத்துள்ளது.

அதன்படி 260 ரூபாவாக இருந்த ஒருகிலோ கீரி சம்பா 248 ரூபாவாகவும், ஒருகிலோ வெள்ளை சீனியின் விலை 9 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ உருளைக் கிழங்கின் விலை 45 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், ஒருகிலோ வெள்ளைப் பட்டாணியின் விலை 42 ரூபாவாலும், இறக்குமதி செய்யப்படும் பச்சைப் பயறு, பச்சைப் பட்டாணி மற்றும் செம்பருத்தி கிலோ ஒன்றின் விலை 30 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் காய்ந்தமிளகாய், வெள்ளைஅரிசி மற்றும் கொண்டைக்கடலை ஆகியவற்றின் விலையும் குறைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக.10

சாவகச்சேரி, செருக்கல்பதி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 9 நாட்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 19ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும் என ஆலய தர்மகர்த்தா தெரிவித்தார். (ரி)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக.10

பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 39 ஆவது மெய்வல்லுநர் விழா பொற்பதி வீதி கொக்குவிலில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலயத்தில் சரஸ்வதி முன்பள்ளித் தலைவர் சண். வாமதேவன் தலைமையில் இன்று சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-45)

# குடமுழுக்கு

சுன்னாகம், கந்தரோடை அருள்மிகு ஆலடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பஞ்ச குண்ட பக்ஷமஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்திப் பெருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 17ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் கர்மாரம்பம் நடைபெற்று 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ரி)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். அனுகூலம் உண்டாகும். அருகில் இருக்கும் உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும். வீண் விவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**இடபம்:** தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவு வி!யத்தில் கவனமாக இருக்கவும். சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். முருகப்பெருமானை வழிபட மகிழ்ச்சி கூடுதலாகும்.

**மிதுனம்:** உடல்நலனில் கவனம் தேவை. செலவுகள் ஏற்படக்கூடும். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். இலாபம் குறைவாகவே கிடைக்கும். சக வியாபாரிகளால் பிரச்சினை ஏற்படும். உங்கள் விருப்பப்படி நடந்துகொள்வார்கள்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். மனதில் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். சங்கடங்கள் ஏற்படும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சலுகை கிடைக்கும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் பணியாளர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கவும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும். கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும் கணவன் மனைவிக்கிடையே வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். உங்கள் முயற்சிக்குப் பக்கபலமாக இருப்பார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவு செய்ய நேரிடும்.

## வரதராஜப்...

யும் இடம்பெறவுள்ளன. திருவிழா ஏற்பாடுகள் சிறப்புற மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-ம)

## ராஜபக்சக்களுக்கு...

களுக்கு தார்மீக உரிமை கிடையாது - என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே, நாமல் ராஜபக்சவின் தேர்தல் பிரவேசம் குறித்துத்து சம்பிக்க ரணவக்க இவ்வாறு காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச உட்பட ராஜபக்சக்களின் குடும்ப உறுப்பினர்களின் அரசியலுக்காகவே பொதுஜன பெரமுன என்ற கட்சி உருவாக்கப்பட்டது. அங்கு திறமையானவர்களுக்கு ஒருபோதும் முன்னுரிமை கிடையாது. இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரமேஷ் பத்திரன, காஞ்சன விஜயசேகர, செஹான் சேமசிங்க, பிரமித்த பண்டார தென்னக்கோன் ஆகியோர் உட்பட மிகச் சிறந்த இளம் அரசியல் தலைவர்கள் ராஜபக்சக்களிடம் இருந்து விலகியுள்ளமையை ஆத்மார்த்தமாக வரவேற்கின்றேன்.

2022ஆம் ஆண்டு எரிபொருள் தட்டுப்பாடு பிரச்சினையின் போது ராஜபக்சக்களின் குடும்ப உறுப்பினர் ஒருவர் என்னைச் சந்தித்து, எரிபொருள் தட்டுப்பாட்டுக்குத் தீர்வுகாண ஒத்துழைப்பு வழங்குமாறு கோரினார். அப்போது 'வலையில் சிக்கிய புலியை பரிதாபப்பட்டுக் காப்பாற்றிய குரங்கை, அடித்து கொன்று இரையாக்கிய புலியின் கதையை' குறிப்பிட்டேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இன்று இதே கதிதான் நேர்ந்துள்ளது. தன்னைப் பாதுகாத்த ஜனாதிபதி மீதே ராஜபக்சக்கள் பாய்ந்துள்ளார்கள்.

தமது தேவை நிறைவடைந்தவுடன் எவராக இருந்தாலும் ராஜபக்சக்கள் அவர்களைத் தூக்கி எறிவார்கள். 2014 ஆம் ஆண்டு நான் அதை ஒரு படிப்பினையாகக் கற்றுக்கொண்டேன். நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா பல பில்லியன் ரூபாவைச் செலவு செய்து இந்த படிப்பினையை 2024 ஆம் ஆண்டு கற்றுக் கொண்டுள்ளார் - என்றார். (அ-ம)

## பொன்சேகா...

இது தொடர்பில் கட்சித் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் ஆகியோருக்கு அவர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் களனி தொகுதி அமைப்பாளர் பதவியையும் பொன்சேகா இராஜினாமா செய்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராகக் களமிறங்குவதற்குரிய கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ள நிலையிலேயே பொன்சேகா இவ்வாறு பதவி துறந்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்புரிமையில் இருந்தும் தவிசாளர் பதவியில் இருந்தும் தன்னை இடைநிறுத்துவதற்கு எதிராக சரத்பொன்சேகா நீதிமன்றம் ஊடாக இடைக்கால தடை உத்தரவு பெற்றிருந்தார். இவ்வாறிருக்கையில், தற்போது தானாக முன்வந்து அவர் பதவி விலகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## செப்ரெம்பர்...

மேற்கொள்ளப்படவுள்ளது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் கடந்த 6ஆம் திகதி மாகாணசபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டவரைவு இரண்டாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதனையடுத்து இந்தச் சட்டவரைவு நாடாளுமன்றக் குழுவில் நேற்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், உயர் நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட சட்டவரைவு 21 ஆம் திகதி சட்டங்கள் தொடர்பான குழுவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதனைத்தொடர்ந்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி சட்டவரைவு மீதான மூன்றாவது வாசிப்பு இடம்பெறவுள்ளது. (அ-ம)

## விபத்தில்...

படுகாயமடைந்த 67 வயதுடைய முதியவர் சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

பாடசாலை முடிந்த பின்னர், சைக்கிளில் தன்னுடைய பேரனை ஏற்றிக்கொண்டு வீடுநோக்கிச் சென்றபோது கூலர் வாகனமொன்றுடன் ஏற்பட்ட விபத்தில் முதியவரும் அவருடைய பேரனும் காயமடைந்திருந்தனர். மன்னார் மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். இந்த நிலையிலேயே அந்த முதியவர் சிகிச்சையின் போது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். (அ-ம-56)

## அதிவேகம்...

சம்பவித்துள்ளது. இரண்டு மோட்டார்சைக்கிள்களிலுமாக நால்வர் பயணித்த நிலையில், காந்தரூபன் கலையரசன் (வயது-21) என்ற இளைஞரே சம்பவ இடத்தில் உயிரிழந்தவராவார். ஏனைய மூவரும் படுகாயமடைந்துள்ள நிலையில் அவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-113-27)

## மனுஷ...

வகித்ததுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கும் ஆதரவளித்தனர்.

அதனையடுத்து ஹரின் பெர்னாண்டோ சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராகவும், மனுஷ நாணயக்கார தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சராகவும் நியமிக்கப் பட்டனர்.

இதையடுத்து, ஐக்கிய மக்கள் சக்தி அவர்கள் இருவரையும் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தியிருந்தது. இந்தத் தீர்மானத் தைச் செல்லுபடியற்றதாக்கி உத்தரவிடுமாறு கோரி உயர்நீதிமன்றில் மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த மனு உயர்நீதிமன்றில் மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்மானம் சட்டரீதியானது என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (அ-ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# முட்டையும் அரசியல் கூழ்முட்டைகளும்

நாட்டில் மீண்டும் முட்டை இறக்குமதியை ஆரம்பிக்கவுள்ளதாக அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. உள்ளூர் சந்தையில் முட்டையின் விலையை 50 ரூபாவாகக்கூட நிர்ணயிக்க முடியாத அளவுக்கு ஏற்பட்டுள்ள கிராக்கியைத் தொடர்ந்தே மாதாந்தம் 30 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்யவேண்டிய தேவை எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படும் நிலையிலேயே இப்படியொரு முடிவை அரசாங்கம் எடுத்திருக்கிறது. தெற்காசியாவில் அதிக ஊட்டச்சத்துக் குறைபாடுகளைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கையும் ஒன்று. இதன்படி, இந்தத் தீவில் 2.3 மில்லியன் குழந்தைகள் உட்பட சுமார் 5.7 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று அண்மையில் பகிரங்கப்படுத்தியிருந்தது யுனிசெப். யுனிசெப்பின் இந்த எச்சரிக்கைக்கும், முட்டையை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டமைக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருக்கவே செய்கின்றன.

இலங்கையில் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதும், பலப்படுத்துவதும் அவ்வளவு கடினமான காரியங்களல்ல. 'ஓர் அரசாங்கமாக' குறைந்தபட்சத் திட்டமிடல்களுடன், குறைந்தகால அவகாசத்தில் மிகமிக இலாவகமாகச் செய்யத்தகுந்த விடயமிது. இறக்குமதியைச் சார்ந்திருக்காது, உள்நாட்டுக் கட்டமைப்புகள் மூலமாகவே இலங்கையர்களின் ஊட்டச்சத்தை பலமடங்கு மேம்படுத்தலாம். பால், மீன், இறைச்சி, முட்டை, தானியங்கள் என ஊட்டச்சத்தை வாரிக்குவிக்கும் விடயதானங்களில் இலங்கை தன்னிறைவு காண்பதெல்லாம் செயற்கரிய செயல்களில்லை. ஆனால், அரசாங்கத்தின் அசண்டையீனமும், அரசியல் இலாபத்தை நோக்காகக் கொண்ட செயற்பாடுகளும்தான் இலங்கையர்களை அனுதினம் நின்றுகொல்கின்றது. அதன் தொடர்ச்சியே மீண்டும் ஒருமுறை முட்டையை இறக்குமதி செய்யவேண்டிய நிலைக்கு நாட்டைத் தள்ளியிருக்கின்றது.

பால் உற்பத்தியில் த்ன்னிறைவு காண்பதற்குப் பதிலாக, மேய்ச்சல்தரைகளை ஆக்கிரமித்து அபகரிக்கும் கபடத்தனத்தையே சிங்கள பேரினவாதம் மேற்கொள்கின்றது. மீன்பிடிக்கும் இதேநிலைதான். அத்துமீறிய இந்திய இழுவைப்படகுகளே இலங்கையின் மீன்வளத்தை அல்லும்பகலும் சூறையாடிக்கொண்டிருக்கின்றன. போதாக்குறைக்கு, இப்போது கடற்பதற்றம் ஒன்று தமிழக மீனவர்களுடன் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. தானிய உற்பத்தியைப் பலப்படுத்தினால் அதன் இலவச இணைப்பாக, கோழித் தீவனங்களும் தானாகக் கிடைக்கும். ஆனால், 'இறக்குமதியே கதி' என்பதுதான் இந்த விடயத்தில் இலங்கையின் நிலை. தானியங்களும் இல்லை, கோழித்தீவனங்களும் இல்லை. இரட்டிப்புப் பின்னடைவாக இறக்குமதியாகவுள்ளது முட்டை.

எதற்கெடுத்தாலும் இறக்குமதியே கதி என்றிருந்தால், எவ்வாறு பொருளாதாரம் மேம்படும்? எவ்வாறு ஊட்டச்சத்து மேம்படும்? தன்னிறைவு காண்பதற்கு வசதியான துறைகளில், உள்நாட்டுப் பொருளாதாரக் கட்டமைப்பைப் பலப்படுத்த அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லை. மாறிமாறி ஆட்சிக்குவரும் இந்த சிந்தனை வறட்சியுடைய அரசாங்கங்களால் முட்டைகளைக்கூட இறக்குமதி செய்யவே முடியும். இவ்வாறிருந்தால், இலங்கை மக்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டை மட்டுமல்ல பட்டினிச்சாவை எதிர்கொண்டாலும் அதில் ஆச்சரியம் என்று என்னதான் இருந்துவிடப்போகின்றது?



# தரநிலையில் முன்வரிசையிலுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி

**கொழும்பு, ஓக. 10**

**புதிய மருத்துவ திருத்தச் சட்டத்தின்கீழ் சர்வதேச தரவரிசைப் பட்டியலில் இடம்பிடித்துள்ள முதல் ஆயிரம் வெளிநாட்டு மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;-

இந்த மருத்துவக் கல்லூரிகளில் பட்டம்பெற்ற 300 மருத்துவர்கள் இலங்கையில் வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். காரணம் இவர்கள் பட்டம் பெற்ற மருத்துவக் கல்லூரிகள் இலங்கையில் அங்கீகரிக்கப்படவில்லை.

புதிய சட்ட திருத்தத்தின் மூலம் இவர்கள் வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

இதனூடாக விசேட மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யமுடியும்- என்றார். (ஒ-6)

# 8 மாதங்களில் 197 யானைகள் பலி!

கொழும்பு, ஓக.10

2024 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் ஓகஸ்ட் 6 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் விபத்துகள் மற்றும் மனித தாக்குதல்களினால் 197 யானைகள் உயிரிழந்துள்ளன என வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் யானைகளின் தாக்குதல்களினால் 73 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# அலி சப்ரி எகிப்து பயணம்

கொழும்பு, ஓக. 10

எகிப்திய வெளியுறவு அமைச்சர் பதர் அப்து லெட்டியின் அழைப்பின் பேரில் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி, மூன்று நாள் பயணமாக எகிப்துக்குச் சென்றுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது, கெய்ரோவில் உள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்வதுடன், எகிப்தின் முதலீடு மற்றும் வெளிநாட்டு வர்த்தக அமைச்சரையும் சந்தித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## இலங்கை – இந்திய நட்புறவுச் சின்னம்

கொழும்பு, ஓக.10

இலங்கை - இந்திய நட்புறவுச்சின்னம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர தேசிய சந்தனக் காட்டில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, சபாநாயகர் மஹிந்த யப்பா அபேவர்த்தன, கல்வி இராஜாங்க அமைச்சர் எஸ். இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி-6)

## வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பதில் நிதிச்சிக்கல்!

வாக்களிப்பு நிலையத்தை அமைக்கும்போது தேவையான பணியாளர்கள் மற்றும் வசதிகளை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை சுதந்திர கிராமசேவை அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த தேர்தலைவிட இம்முறை ஊழியர் ஒருவருக்கு வழங்கப்படும் தினப்படி 3 மடங்கு அதிகரித்துள்ளது. வாக்களிப்பு நிலையத்தை அமைக்கத் தேவையான போதிய தினப்படியை வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று அந்தச் சங்கத்தின் பொதுச் செயளாலர் ஜகத் சந்திரலால் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## நாளை

11.08.2024

ஞாயிற்றுக்கிழமை - ஆடி - 26

சுபநேரம் : 09.04 - 10.34

ராகுகாலம் : 04.34 - 06.04

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கொடி

## நாளொரு நல்வார்த்தை

**ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை.**

*-லியோ டால்ஸ்டாய்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக நீதிக்கட்சி விஷேட மாநாடு

திருகோணமலை, ஓக 10

சமூக நீதிக் கட்சியின் தேசிய செயற்குழு அங்கத்தவர் களுக்கான 'திடமாய் முன்னோக்கி' எனும் மகுடத்தின் கீழான விஷேட மாநாடு கிண்ணியாவில் இன்று சனிக் கிழமை நடைபெறவுள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்த கட்சியின் நிலைப்பாட்டினை, செயற் குழு அங்கத்தவர்களுடன் கூடி ஆராய்ந்து முடிவெடுக்க, தலைமைத்துவ சபை தீர்மானித்துள்ளது. மேலும், சமூக நீதிக் கட்சியின் கொள்கைகளின் அடிப்படையில், கட்சி நடவடிக்கைகளை தேசிய ரீதியில் விஸ்தரிப்பது, கட்சியை பலப்படுத்துவது மற்றும் கட்சியின் எதிர்கால செயற்றிட்டங்கள் போன்ற பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடி மிக முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றும் நோக்கிலேயே இம்மாநாடு கூட்டப்படு கிறது. (ம-25)

## நாடகக் காட்சி

யாழ்ப்பாணம், ஓக. 10


யாழ்ப்பாணத் திரைப் படக் கழகத்தினரின் ஏற் பாட்டில் 'பெர்னாடா அல்பாவின் வீடு' எனும் வெரிக்கோ கார்சியா லோர்காவின் நாடகக் கதை திரை வடிவம் ஆங்கிலத் துணைத் தலைப்புகளுடன் மரியோ கமுஸ் இன் நெறியாள்கையில் யாழ்.தந்தை செல்வா கலையரங்கில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இல வசமாகக் காட்சிப்படுத் தப்படவுள்ளது. (ம-25)

## 2024 ம் ஆண்டிற்கான மகோற்சவ கலந்துரையாடல் கூட்டம்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் அறங்காவல் சபையினால் மேற்படி ஆலய வருடாந்த மகோற்சவம் தொடர்பாக 10.08.2024 ம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்ட கலந்துரையாடல் கூட்டம் 17.08.2024 ம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கண்ணன் இல்லத்தில் நடைபெறும் என்பதை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தயவுடன் தெரிவித்துக் கொள்வதோடு அன்றைய தினம் வருகைதந்து தங்கள் கருத்துக்களை, ஆலோசனைகளை வழங்கி மகோற்சவம் திறம்பட நடைபெற ஒத்துழைப்புக்கள் வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பெறுநர்
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

## நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



மலர்வு : 30.03.1962 உதிர்வு : 01.07.2024

### அமரர் சண்முகநாதன் மனோகரன்

(NEW கந்தசாமி ஸ்ரோஸ் உரிமையாளர் பலாங்கொடை)

10.08.2024

*நினைவலைகள்.......*

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து–இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குலவிளக்கே.....!
உம் புன்னகைவிரிந்த பூமுகம் காண வழியின்றி தவிக்கின்றோம்
இங்கு பெருவெளியாய் காட்சியளிக்கிறது உமக்கான இடம்
கொடியின் வேரும் அறுந்து போனால்
மலரின் சிறப்பும் சருகாய் உதிர்வது போல
உம் பேரிழப்பால் நாம் துயருற்று நிலை தளர்ந்தோம்
வீசும் காற்றினாலும் நாம் விடும் மூச்சினாலும்
எட்டுத்திக்குகளிலும் உங்கள் நினைவால் வாடுகிறோம்
விழியோரம் கசியும் கண்ணீர்த்துளிகளை–உம்
பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

என்றென்றும் மறக்க முடியாத நினைவுகளுடன்
தாய், மனைவி, மாமி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள், மச்சான்மார், மச்சாள்மார்

வட்டுவினி மேற்கு
இணுவில்

## அறிவித்தல்



பொது மக்களுக்கும் வனிக்கா சேர்ஜிகல்ஸ் நீண்ட நாள் வாடிக்கையாளர் களுக்கும் எம் நிறுவனம் அறியத் தருவதாவது, **திரு. பஞ்சாட்சரம் தனரங்கன் (தனா - அடையாள எண் :** 810830468V, **இல.182, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.)** எம் நிறுவனத்தில் 2021 இல் செயல்பாட்டு முகாமையாளராக சேர்ந்து பின் பொது பணியாளராக செயல் பட்டுவந்தவர், 02/02/2024 இல் இருந்து நீங்கி உள்ளார்.

வனிக்கா சேர்ஜிகல்ஸ் முகாமைத்துவம் மேல் குறிப்பிட்ட நபரால் மேல் கொள்ளும் நிதி, நிறுவன நடவடிக்கைகளுக்கு எவ்வித பொறுப்பும் ஏற்காது என்பதை அறிய தருகிறோம்.

நிர்வாகம்

## Public Notice




This is to inform the general public and our long-lasting customers of Vanikaa Surgicals that Mr. PANCHADCHARAM DHANARANGAN (Aka Dhana - holder of National Identity card No - 810830468 V, No. 182, Adiyapatham Road, Kokuvil East, Kokuvil, Jaffna.) who was hired as an Operation Manager in 2021 and later functioned as a general staff is no longer employed in our service or in the service of any of our subsidiary establishments with effect from the 02/02/2024.

It is further informed that the management of Vanikaa Surgicals takes no responsibility or liability for any transaction, financial or otherwise, entered into by the above person with any party, institute or organisation with effect from the date mentioned above.

**Administration**

## மரண அறிவித்தல்

மலர்வு 16 03 1939



உதிர்வு 08 08 2024

### அமரர் சீவரத்தினம் சிவஞ்ஞானம்

யாழ்ப்பாணம், மயிலிட்டி தெற்கு, கட்டுவனைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸினை வதிவிட மாகவும் கொண்ட சீவரத்தினம் சிவஞ்ஞானம் அவர்கள் நேற்றுமுன்தினம் (08.08.2024) வியாழக்கிழமை சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சீதேவன் தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவரான சுப்பிரமணியம் மற்றும் நாகம்மாவின் பாசமிகு மருமகளும், சுப்பிரமணியம் சீவரத்தினம் (குருவி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவரான தங்கம்மா மற்றும் செல்வரத்தினம், நாகரத்தினம், சிவமணி, சிவபாக்கியம், காலஞ்சென்றவரான சிவலிங்கம், காலஞ்சென்றவரான சிவசுப்பிர மணியம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், தெய்வேந்திரன் (நெதர்லாந்து), இந்திராதேவி (கொக்குவில்), கமலாதேவி (நீர்வேலி), ரவீந்திரன் (பிரான்ஸ்), சறோஜினிதேவி (பிரான்ஸ்), பாலேந்திரன் (பிரான்ஸ்), லலிதாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(CS/1104) J-1

தகவல்: குடும்பத்தினர்.
(மகள், பேரன்)

தொடர்புகளுக்கு : 0779789311, 0772718467

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் தாய் உயிரிழப்பு; தவறிழைக்கப்பட்டால் தண்டனை

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 10**

**மன்னார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம் தாய் சிந்துஜாவின் மரணம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். இந்த விடயத்தில் ஏதாவது தவறுகள் இடம்பெற்றிருந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மருத்துவ திருத்தச் சட்டவரைவு மீதான விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இது தொடர்பான விசாரணை அறிக்கை ஆராயப்படுகிறது. குறித்த விடயத்தில் ஏதாவது தவறுகள் நடந்திருந்தால் அது தொடர்பில் நிச்சயமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்போம்.

நாட்டில் நோயாளர்களை பாதுகாப்பது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். அதற்காகவே புதிய சட்டவரைவொன்றை முன்வைத்துள்ளோம் - என்றார். (ச-இ)

# மது விலையைக் குறைப்பது பாவனையை ஊக்குவிக்கும்

## மதுத் தகவல் நிலைய பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.10

மதுபானங்களின் விலையைக் குறைக்குமாறு மது வரித்திணைக்களம் விடுத்த கோரிக்கையானது, மது பாவனையை ஊக்குவிப்பதாக அமையும் என போதைவஸ்து மற்றும் மது தகவல் நிலையப் பணிப்பாளர் மருத்துவர் டீ.சேரம் தெரிவித்துள்ளார்.

2024 ஜுன் 30 வரை 1.8 பில்லியன் ரூபா மதுவரித் திணைக்களத்துக்கு நிலுவையாகவுள்ளது. மதுபான உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து நிலுவையாக உள்ள வரிப்பணத்தை அறவிட முடியாத மதுவரித் திணைக்களம் மதுபானங்களின் விலையைக் குறைக்குமாறு கோரிக்கை விடுக்கிறது.

2023 ஆம் ஆண்டு மதுபான வரிப்பணத்தின் மூலம் கிடைத்த வருமானம் 165.2 பில்லியன். ஆனால், மதுவுக்கு அடிமையானோருக்காக சுகாதார அமைச்சு செலவிட்ட பணம் 237 பில்லியன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-25-6)

## மக்கள் முறைப்பாடுகள்

# விசாரணைகள் செய்ய சுங்க விவகாரப் பிரிவு

கொழும்பு, ஓக.10

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பொது முறைப்பாடுகளைப் பெற்று விசாரணை செய்வதற்கான உள் விவகாரப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். பொதுமக்களுக்கும் சுங்கத்துக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவதே இதன் நோக்கம். முறைப்பாடுகளை 0112-221331, 0112-221333, 0704752 803 மற்றும் மின்னஞ்சல் iau.slcust oms@gmail.com, வட்அப் 070475 2803 ஆகியவற்றுக்கு அனுப்பிவைக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## மலையக ஆசிரியர்களுக்கு

# இந்திய அரசால் ரூ. 750 மில்லியன்

கொழும்பு, ஓக. 9

மலையக ஆசிரியர்களுக்கு கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களில் பயிற்சியளிப்பதற்கென 750 மில்லியன் இந்திய ரூபாவை இந்திய அரசு ஒதுக்கியுள்ளது.

பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் பயிற்சிகளை வழங்குவதற்கென 19 விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர்.

ஊவா, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணத்திலுள்ள 40 நிலையங்களில் பத்து வாரங்களுக்கு இந்த பயிற்சிகள் நடைபெறும். வட மத்திய, மேல்மாகாண ஆசிரியர்களும் இந்த பயிற்சிநெறியில் நிகழ்நிலையில் இணைந்து கொள்ளவுள்ளனர். (ச-6)

# கட்டட, ஆயுள்வேத செயற்றிறன் குறைவு

## ‘கோபா’ குழு அதிருப்தி

கொழும்பு, ஓக. 10

கட்டடத் திணைக்களம் மற்றும் ஆயுள்வேத திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் தனது அதிருப்தியை பொது கணக்குகள் குழுவான ‘கோபா’ குழு வெளியிட்டுள்ளது. தரவுகளின்படி, கட்டடத் திணைக்களம் மற்றும் ஆயுள்வேத திணைக்களம் ஆகிய இரண்டும் குறைந்த செயற்றிறன் கொண்ட நிறுவனங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அதற்கமைய இந்த இரண்டு நிறுவனங்களையும் ஒருநாள் குழுவின் முன்னிலையில் அழைக்கத் தீர்மானிக்கப்பட்டதாக குழுத்தலைவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# கைபேசிப் பாவனையால் குழந்தைகள் மூளை பாதிப்பு

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 10

டிஜிற்றல் திரைகளைப் பயன்படுத்துவதால் சிறுவர்களின் மூளை வளர்ச்சி வீதம் பாதிக்கப்பட்டு வருகின்றது என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் விசேட மருத்துவ நிபுணர் இனோகா விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பெரும்பாலான பெற்றோர் வேலைகளை இலகுவாக முன்னெடுப்பதற்காக அவர்கள் தங்களது குழந்தைகளிடம் வழங்குகின்றனர். டிஜிற்றல் திரைகளைப் பயன்படுத்த இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளை அனுமதிப்பது பொருத்தமற்றது. குழந்தைகள் தொடர்ந்தும், கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும்போது அவர்களின் மனநிலையில் எதிர்மறையான விளைவுகள் ஏற்படும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ச-இ)

# தினம் தெரியுமோ?

**கையில வெண்ணெயை வைச்சுக்கொண்டு நெய்க்கு அலைஞ்ச கதை தெரியுமோ? எங்கட இடத்திலேயே உலகத்து அதிசயமெல்லாம் கொட்டிக்கிடக்க, நாங்கள் ஊர் ஊரா அலைஞ்சு திரியிறம். யாழ்ப்பாணம் ரவுனுக்குள்ள இருக்கிற 'நியூமார்க்கெட்'கட்டடம் இப்பிடி நிறைய அதிசயங்களையும், சாதனையளையும் தனக்குள்ள பொத்தி வைச்சிருக்கு. ஒருக்கா அந்தக் கட்டடத்துக்கும், அங்க உள்ள படிக்கட்டுக்கும் போய்வந்தால், வாழ்நாளில பிறகு அந்த இடத்தை மறக்க மாட்டியள். படி முழுக்க ஒரே வெத்திலைத் துப்பலும், பீடி அடிக்கட்டைகளும் , சாராயப் போத்தல்களும், பியர்ரின்களும் எண்டு ஒரே 'மொ டேர்ன்' அலங்காரமும், நறுமணமும் தான். என்னதான் வெள்ளையடிச்சு, கழுவி விட்டாலும் என்ன மாயமந்திரமோ தெரியேலை, அடுத்தநாளே அந்தப் படிக்கட்டுகள் பழையபடி வெத்திலைத்துப்பல், சாராயப் போத்தல் எண்டு பழையபடியே வந்திடும். இந்தக் காட்சியைக் காணக் கண் ஆயிரம் கோடி வேணும். எண்டாலும் என்ன சிக்கல் எண்டால், இந்தப் படிக்கட்டைத் தாண்டுறதெண்டால், மூக்கையும், கண்ணையும் பொத்திக் கொண்டுதான் போக வேணும்.**

**சிலவேளையளில அந்தப் படிக்கட்டுகளில் இந்த 'வெறித்தன' வெத்திலை அலங்காரத்தைச் செய்த 'ஆர்ட்டிஸ்ட்மார்' கொஞ்சம் களைப்பில கையில பியர்ரின்களோட அதே படிக்கட்டில குந்தியிருப்பினம். அந்த நேரங்களில காதுக்கும் தேன்மாதிரி தித்திக்கும் தூசணங்களைச் சொல்லி போற வாறவையை ஆனந்தக் கடலில மூழ்கடிப்பினம். ஆனாலும் எங்கட சனத்துக்கு கொஞ்சமும் ரசனையில்லை. இப்பிடியான தித்திக்கும் தூசணங்களைக் கேட்டவுடன காதைப் பொத்திப்போடுவினம். அதால ஒரே நேரத்தில மூக்கு, கண், வாய், காது எண்ட எல்லாத்தையும் பொத்திக் கொண்டு போறமாதிரி உலகத்திலேயே இந்த இடம் மட்டும்தான் இருக்கும். முனிசிபல்காரர் கின்னஸ்காரருக்கு அறிவிச்சால் ஒருவேளை இந்த நியூமார்க்கெட்டை இப்பிடிப் 'பொத்திக்கொண்டு போற' விசயத்துக்காக சாதனை படைச்ச கட்டடம் எண்டு அறிவிக்கவும் கூடும். காந்தியின்ர மூண்டு குரங்குகளும் தீயவற்றைப் பாக்காதை, பேசாதை , கேக்காதை எண்டு மூண்டு விசயத்தை மட்டும் தான் சொல்லுது. ஆனால் இந்தக் கட்டடமோ 'பார்க்காதை, கேக்காதை, பேசாதை, மணக்காதை' எண்டு அதுக்கும் மேலான தத்துவத்தைச் சொல்லி வாழ்க்கையை எல்லாருக்கும் வடிவா விளங்கப்படுத்துது.**

**இப்பிடி ஒரு உலகப் புகழ் பெற வேண்டிய கட்டடத்துக்கு, இன்னும் பெருமை சேர்க்கிற ஒரு சம்பவம் முந்தநாள் நடந்திருக்குது. முந்தநாள் இரவு யாழ்ப்பாணம் ரவுனுக்குள்ள நல்லமழை. அந்த மழையில உந்த நியூமார்க்கெட்டின்ர மேல்பக்க கொங்கிறீட் தட்டு ஒண்டு அப்பிடியே லட்டு மாதிரி கீழ கொட்டுப்பட்டுப் போட்டுது. இரவு ஆக்கள் இல்லாததால இந்தக் கொங்கிறீட் மழைக்குள்ள சிக்குப்பட்டு, சின்னாபின்னமாகிற சந்தர்ப்பத்தை தவற விட்டிட்டினம். ஆனாலும் ஒண்டும் கெட்டுப்போகேலை. இன்னும் கொஞ்ச நாளில மாரிகாலம் தொடங்கிடும். அதுக்குப் பக்கத்தில சீமெந்து கொட்டுப்பட்டு, உக்கின கம்பி வெளியில தெரியத் தொடங்கிட்டுது. எப்பிடியும் அதுகள் மாரிமழைக்கு கீழ கொட்டிண்டு சாகசம் காட்டேக்க, இந்த முறை தவற விட்ட சனங்கள் அதுக்க சிக்குப்பட சந்தர்ப்பம் கூட இருக்குது. அப்பிடி நடந்தால் மாரி காலங்களில கொங்கிறீட் மழை பெய்யிற கட்டடம் எண்ட சாதனையும் நியூ மார்க்கெட்டுக்கு வந்திடும். இப்பிடியான சாதனைகள் நடக்கிற கட்டடங்கள் இருக்கிற காலத்தில வாழ்றது யாழ்ப்பாணத்தார் எல்லாருக்கும் பெருமைதான் கண்டியளோ.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ். சுண்டுக்குளி மொறிஸ் ஒழுங்கையில் பிரிக்கப்பட்ட காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

இடைத்தரகர்கள் தேவையில்லை

076 156 2983

(CS55882) J-1

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் விசேட பொதுக்கூட்டம்

18.08.2024 ஞாயிற்றுக்கிழமை எமது சங்கத்தின் மகோற்சவ கால விசேட பொதுக்கூட்டம் காலை 9.00 மணியளவில் சங்கப் பணிமனையில் இடம் பெறவுள்ளது. அனைத்து அங்கத்தவர்களும் உரிய நேரத்திற்கு சமுகம் தந்து ஒத்துழைப்பு வழங்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 55904) V-1

-இணைச் செயலாளர்கள்-

## ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY

வடமராட்சி மாணவர்களின் நலன் கருதி, நெல்லியடிச் சந்தியில் இருந்து மானிப்பாயில் உள்ள நமது பிரதான பாடசாலைக்கு பேரூந்து சேவையை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம்.

நெல்லியடிச் சந்தி - ஆரைங்கால் சந்தி - புத்தூர்ச் சந்தி - நிலாவரை - மாசிவன் சந்தி - கோப்பாய் கிருஸ்னன் கோவிலடி - உரும்பிராய்- மருதனார்மடம் - மானிப்பாய்



மேலதிக தகவல்களுக்கு : 077 844 80 20 / 021 225 5628

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | :- மல்லாகம் உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | :- மரியநாயகம் அமல் சேவியர் பியோமிலன் |
| விண்ணப்பதாரர் பெயர் | :- மரியநாயகம் அக்னெல் அனோமிலன் |
| முகவரி | :- புனித ஜோசப் தேவாலய ஒழுங்கை, அளவெட்டி மேற்கு, அளவெட்டி |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 19, வல்லை சங்கானை வீதியில் ஆதன இல. 481/3 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, அளவெட்டி இறை "குரும்பை விளானை" என்ற ஆதனம் உரிமைகோருபவர் S. சந்தானசாமி என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 19.07.2021 ஆந்திகதிய பிரசித்த நொத்தாரிஸ் மரியதாஸ் யூட் டினேஸ் அவர்கள் முகதாவில் இலக்கம் 940 இல் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்ப தாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த 940 ஆம் இலக்க உறுதிக்கான தாயுறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள பிரசித்த நொத்தாரிசு பொ. சுந்தரலிங்கம் முகதாவில் 12.08.2005 ஆம் திகதியில் 1702 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விண்ணப்பதாரருக்கு இவ் ஆதனத்தை விற்பனை செய்த சூசைப்பிள்ளை சந்தானசாமிக்கும் அவரது மனைவி சந்திராபாய் இற்கும் வந்தடைந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 940 ஆம் இலக்க உறுதியில் விண்ணப்பதாரருக்கு ஆதனத்தை விற்ற சூசைப்பிள்ளை சந்தானசாமியின் மனைவி இறுதி விருப்பாவணம் எழுதியிருந்ததாகவும் (Last will) குறித்த இறுதி விருப்பாவணம் District Court of England & Wales இல் நிரூபிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரசித்த நொத்தாரிசு பொ. சுந்தரலிங்கம் முகதாவில் 12.08.2005 ஆம் திகதிய 1702 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதியானது யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள H797/04 இலக்க காணிப்பதிவுப் புத்தக இருமடித்தாளின் பிரதி ஆதன வரிப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 1702 ஆம் இலக்க உறுதிக்கான தாயுறுதியாக பிரசித்த நொத்தாரிசு வ.தம்பிப்பிள்ளை முகதாவில் 1985.06.23 ஆம் திகதியில் 6060 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் குறித்த உறுதி தொலைவடைந்துவிட்டதாகக் குறிப்பிட்டுக் காணிப்பதிவகத்தினால் கடிதம் விண்ணப் பதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை "குரும்பைவிளானை" நிலப்பரப்பு இரண்டு குளி பதினாறு தசம் ஏழு எட்டு (நிலப்பரப்பு 2 குளி 16.78) இது நிலஅளவையாளர் K.T. சிறிகாந்தசிங்கம் 676ம் இலக்கத்தில் 15.10.2019 என திகதியிட்டு வரைந்த படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டுள்ளது.

இதற்கு எல்லைகள்

கிழக்கு :- இராசையா பெண் செல்லம்மாவின் ஆதனம் மற்றும் சூசையப்பர் கோவில்

வடக்கு :- பாதை, சூசைப்பிள்ளை இக்னேயஸ் செபஸ்தியன் மரியநாயகம் பெண் ஆன் புனிதம் ஆதனம்

மேற்கு :- சூசைப்பிள்ளை இன்னேசியஸ் செபஸ்தியன் மரிய நாயகம் பெண் ஆன் புனிதம் ஆதனம்

தெற்கு :- சவரிமுத்து ஜேசுதாசன் றிச்சேட் மற்றும் பங்காளருக்குரிய ஆதனம்

இவ்வெல்லைப்படி இது முழுவதும் இதற்குரியவைகளும்

மேற்குறித்த ஆதனத்தை மரியநாயகம் அமல்சேவியர் பியோமிலன் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மரியநாயகம் அமல்சேவியர் பியோமிலன் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(CS/55898) J-1

# குழந்தைகளிடையே தூக்கமின்மை உயர்வு

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 10

நாட்டில் குழந்தைகளின் நித்திரை தொடர்பில் பல பிரச்சினைகள் காணப்படுவதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் விசேட மருத்துவ நிபுணர் இனோகா விக்கிரமசிங்க தெரிவிக்கையில்;

கிடைக்கக்கூடிய மட்டுப்படுத்தப்பட்ட தரவுகளின்படி, ஒருவயது வரை 25% குழந்தைகளுக்கு தூக்க மின்மை பிரச்சினை காணப்படுகிறது.

இளமை பருவத்தில் தூக்கமின்மையால் ஏற்படும் விளைவுகள் முதியவர்கள் மற்றும் இளைஞர்களின் தூக்கத்தில் சில சிக்கல் நிலைமைகளை ஏற்படுத்தும்.

குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கு ஆழ்ந்த நினைவாற்றலாக நிலையான நினைவாற்றல் இருக்க நல்ல தூக்கம் அவசியம்.

தூக்கமின்மை மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்தையும் வளர்ச்சியிலும் தாக்கம் செலுத்தும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ச-இ)

# வெற்றிடங்களுக்கு இருவர் நியமனம்

யாழ்ப்பாணம், ஓக.10

உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் வெற்றிடமாகியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு பந்துல லால் பண்டாரிகொட மற்றும் ஹிருணிகா பிரேமசந்திர ஆகியோர் நியமிக்கப்படவுளனர்.

ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரை கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் சட்டரீதியானது என உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

இந்த நிலையிலேயே புதிய இரு எம்.பி.க்களை நியமிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்து எது. (ச-44)

## பதினேழாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 14 . 03 . 1947



உதிர்வு 10 . 08 . 2007

**அமரர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன்**
**(ஓய்வுபெற்ற கிராம அலுவலர், ஊர்காவற்றுறை, பருத்தித்துறை)**

எம் உள்ளங்களை நிறைத்த
உயர்ந்த உறவு - அப்பா!
எம் உணர்வுகளில் கலந்து
என்றும் நிலைத்தவர்
எம் பயணங்களில் ஒளிமிக்க
பிரகாசமான வழிகாட்டி
இன்றுவரை அவர் நினைவுகளுடன்
அவர் தடங்களில் நாம்.

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**
**பிள்ளைகள்**

**தணிகை,**
**அல்வாய் வடக்கு, அல்வாய்.**

(CS/1076) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 20 . 10 . 1948

மறைவு 12 . 07 . 2024

## அமரர் திருமதி சுமதினி இராசையா (பபி)

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்ப்பூக்களால் அர்ச்சித்து
உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!

யாழ்.சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வவுனியா மற்றும் சிங்கப்பூரை வதிவிடமாகவும் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் இன்று (10.08.2024) சனிக்கிழமை சிங்கப்பூரில் நடைபெறும்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நாம் துயருற்றிருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் மற்றும் முகநூல் ஊடாகவும் எமக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மலர்மாலைகள், மலர்வளையங்கள் சாத்தியவர்களுக்கும் எமக்கு பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்

(CR/43085) J-1

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 05 . 1925

மறைவு 08 . 08 . 2024

## மாப்பாணி தங்கராசா

**(தவசிகுளம் கண்ணகை அம்பாள் ஆலய முன்னாள் தர்மகர்த்தாவும், பூசகரும்)**

ஐயனார் கோவிலடி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், மடத்தடி வீதி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாப்பாணி தங்கராசா அவர்கள் நேற்று முன்தினம் (08.08.2024) வியாழக்கிழமை தனது இல்லத்தில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாப்பாணி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பு, கனகு, செல்லத்துரை, இராசதுரை, பரமேஸ்வரி, தங்கரத்தினம் ஆகியோரின் சகோதரனும், நவரத்தினம், காலஞ்சென்ற சந்திரமலர் மற்றும் சிவராசா, கணேசலிங்கம், சுபேந்திரன் (லண்டன்), சுதர்சினி, சூரியகுமாரி (லண்டன்), சுதர்சுதன், சுபாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், செல்வராணி, காலஞ்சென்றவர்களான காசிநாதர், செல்லமணி மற்றும் யோகேஸ்வரி, ஜெயந்தி (லண்டன்), காலஞ்சென்ற குணசிங்கம் மற்றும் மனோகரன் (லண்டன்), சுபாஜினி, விமலினி (லண்டன்) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.08.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மடத்தடி வீதி,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 861 6110

(CR/43095) J-1

# ஓராண்டு நினைவஞ்சலி



கடந்த 23.07.2023 ஞாயிற்றுக்கிழமை
இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர் திருநாவுக்கரசு கமலாம்பிகை

(திதி = ஆடிமாத வளர்பிறை ஷஷ்டி)



அம்மா..!
அருவமாய் எம் மனங்களை அவனியிலே
என்றும் ஆளும் அன்புருவே!
ஆண்டொன்று சென்றாலும்
ஆறாத வலிகளுடன் நாம்
உங்கள் ஆத்மா இறையடியில்
சாந்திபெற வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அவர்களின் முதலாம் ஆண்டுத்திவச ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (10.08.2024) சனிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

(CS/55892) J-1

உம் ஒழுங்கை,
[illegible] சாவகச்சேரி.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05.02.1947 | 09.08.2024 |



## சுப்பிரமணியம் ஜெயரத்தினம்

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சுப்பிரமணியம் ஜெயரத்தினம் அவர்கள் (09.08.2024) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-மாமங்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான நாகநாதன்-சிவனேசாம்பாள் தம்பதிகளின் அன்பு மருமகனும் தவராணியின் (சித்திரா). அன்புக் கணவரும். ஜெயப்பிரதாபனின் (கண்ணன்). முன்னாள் சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்-நீதிவான் நீதிமன்றம் பருத்தித்துறை/ ஊர்காவத்துறை. சட்ட உத்தியோகத்தர். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வவுனியா). அன்புத் தந்தையும். சட்டத்தரணி காயத்திரி (நீதிமன்றம் உரை பெயர்ப்பாளர்-நீதிவான் நீதிமன்றம் யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமனாரும். மகாலிங்கம் (லண்டன்). மகேந்திரராணி. சிவநாதன். பவளராணி. காலஞ்சென்ற சிவபாலன். மற்றும் புஸ்பராணி ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.08.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நகுலேஸ்வரம் வீதி. கரும்பனைச் சந்தியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கீரிமலை செம்பொன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


நகுலேஸ்வரம் வீதி,
கருகம்பனை.

தகவல்: குடும்பத்தினர்.
077 371 8488

(CR 1110) V-1

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22.09.1975 | 15.07.2024 |



நெடுந்தீவு மேற்கு 3ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வவுனியா புதுக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கடந்த 15.07.2024 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு

## அமரர் நல்லதம்பி சசிகுமார்

**(நெடுந்தீவு முன்னாள் பிரதேச சபை தவிசாளர், நெடுந்தீவு புதுக்கடை உரிமையாளர்)**

அன்னாரின் அஸ்தி இன்று (10.08.2024) காலை 5.00 மணியளவில் கீரிமலை தீர்த்தத்தில் சமய கிரியைகள் நடைபெற்று. அஸ்தி கரைக்கப்படும்.

அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து எதிர்வரும் (14.08.2024) புதன்கிழமை அவர்களின் இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் சபீண்டிகரண கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

# 'அமுதசுரபி' மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக 10

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி அமுத சுரபி அன்னதான மடத்தின் ஐந்தாவது 'அமுதசுரபி' மலர் வெளியீடு அன்னதான மட முதல்வர் க.சிவநேசன் தலைமையில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆசியுரையை நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியரும் வாழ்த்துரையை கதிரமலை சிவன் தேவஸ்தான குருக்கள் சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் மற்றும் கோப்பாய் பரமேஸ்வரி அம்மன் ஆலய குருக்கள் சிவஸ்ரீ ஐயப்பதாசன் ஆகியோர் ஆற்றுவர்.

நூலின் வெளியீட்டுரையை சாவகச்சேரி பிரதேசசபை ஓய்வுநிலை செயலாளர் க.சிவசாகலிங்கம் நிகழ்த்துவார்.

நிகழ்வில் பிரதம அதிதியாக மதுவரித்திணைக்கள ஓய்வுநிலை ஆணையாளர் எஸ்.செந்தூர்ச் செல்வன், சிறப்பு விருந்தினர் களாக சாவகச்சேரி பிரதேசசபை ஓய்வு நிலைச்செயலாளர் கே.சிவராஜ லிங்கம், தொண்டைமானாறு தெற்கு கிராம அலுவலர் குமரன், கௌரவ விருந்தினர்களாக தொல்பொருள்திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் க.கயிலைவாசன், ஓய்வுநிலை தபாலதிபர் குகனேசன் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ச–25,131)

## மகோற்சவ கால கடைகளுக்கான ஏலம்

**(11.08.2024, மாலை 4.30)**

மேற்படி ஆலய ஆவணி மகோற்சவம் 11.08.2024 அன்று ஆரம்பமாகின்றது. இம் மகோற்சவ கால கடைகளுக்கான ஏலம் 11.08.2024 அன்று மாலை 4.30 மணியளவில் ஆலயத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகிறோம்.

-பரிபாலன சபை-
076 170 7073

விராம் விஸ்வபிரம்மனே நமக

# மரண அறிவித்தல்



## அமரர் கனகராசா அன்னபூரணம் (சின்னமணி)

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும் பிள்ளையார் கோவிலடி கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகராசா அன்னபூரணம் (சின்னமணி) (07.08.2024) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர்-இரட்ணம் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை-பொன்னம்மா ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்ற கனகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மனோரஞ்சிதம். தையல்நாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும். நிர்மலா (பிரான்ஸ்). சாந்தினி. நித்தியானந்தம். சுமதி (பிரான்ஸ்). சிவானந்தன் (Halo Trust). பவானந்தன் (இ.போ.ச.சாரதி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் தர்மரத்தினம். பத்மாவதி. குகதாஸ். தேவகுமாரி. பிரியதர்சினி ஆகியோரின் மாமியாரும். கனீபராஜ் (பிரான்ஸ்). கரிகரன் (இலங்கைவங்கி). றஜிதா. திவாகரன் (சிங்கப்பூர்). சதீஸ்வரன். பத்மகாந்தன். பானுகாந்த. பார்தீபன். மயூரா. நிதுசன் (பிரான்ஸ்). மிதுனா (பிரான்ஸ்). யஸ்மினா (பிரான்ஸ்). காலஞ்சென்ற மதுசன் மற்றும். வபிதா. அபிதா. டினோஜன் ஆகியோரின் பேர்த்தியும் சைனி (பிரான்ஸ்). டிவைனி. தியாஸ்வி ஆகியோரின் பூட்டியுமாவார், அன்னாரின் பூதவுடல் 11.08.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் கிரியைகள் பி.ப. 1.00 மணியளவில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத் தருகிறேன்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
மகன் - 076 765 8517
மகன் - 077 865 8291
மகன் - 077 922 6769

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1109) V-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இணுவில் அறிவாலயத்தில் இன்று திருக்குறள் மாநாடும் கலைவிழாவும்

யாழ்ப்பாணம், ஓக. 10

இணுவில் அறிவாலயத்தின் 'திருக்குறள் மாநாடும் கலைவிழாவும்' இணுவில் அறிவாலயத்தில் இன்று காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளன.

காலைநேர நிகழ்வுகளுக்கான வரவேற்புரையை இணுவில் அறிவாலயத்தின் உபதலைவர் யோ.சுதந்திரன் ஆற்றவுள்ளார். தலைமை உரையை இணுவில் அறிவாலயத்தின் தலைவர் பேராசிரியர் மகேஸ்வரன் ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து, திருக்குறளில் அறிவுபற்றி ஆராய்ச்சி என்னும் விடயப்பொருளில் கலாநிதி செல்வமனோகரனும், திருவள்ளுவர் என்னும் கவிஞன் என்ற விடயப்பொருளில் கலாநிதி க.இரகுபரனும், திருக்குறளில் சமணச் சார்பு குறித்த மெய்யியல் நோக்கு எனும் விடயப்பொருளில் கலாநிதி ச.முகுந்தனும் உரையாற்றவுள்ளனர்.

தொடர்ந்து, 'இல்வாழ்க்கை என்று திருவள்ளுவர் கூறும் கருத்தியல் சமகாலத்துக்குப் பொருந்துமா? பொருந்தாதா?' என்ற விடயப்பொருளில் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.

கௌரவிப்பு, நன்றியுரையைத் தொடர்ந்து காலைநேர நிகழ்வுகள் முடிவடைகின்றன. மாலை 4.30 மணிக்கு மாலைநேர நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன. இதன்போது, வரவேற்புரையை இணுவில் அறிவாலயத்தின் உபதலைவர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை ஆற்றவுள்ளார். தலைமை உரையை இணுவில் அறிவாலயத்தின் தலைவர் பேராசிரியர் மகேஸ்வரன் ஆற்றவுள்ளார். தொடக்கவுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா ஆற்றவுள்ளார். தொடர்ந்து இசையரங்கு, ...ன ஆற்றுகைகள் என்பன இடம்பெறவுள்ளன. (ம)

## வெளிநாட்டு...

தில் செய்யப்பட்டிருந்த விளம்பரத்தைப் பார்த்து யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்தஒருவர்அதில்குறிப்பிடப்பட்டிருந்த உள்நாட்டு மற்றும் பிரிட்டன் தொலைபேசி எண்களுக்குத் தொடர்பு கொண்டுள்ளார். அந்தத் தொலைபேசி இலக்கங்களில் பேசியவர்கள், வங்கிக் கணக்கில் ஒரு தொகைப் பணத்தை வைப்பிட்டுக் காட்டவேண்டும் என்றும், சில ஆவணங்களைத் தங்களுக்கு அனுப்ப வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

தொலைபேசியில் பேசியவர்களின் கதையை நம்பி, தனது கடவுச்சீட்டுப் பிரதிகள், அடையாள அட்டைப் பிரதிகள் உட்பட பல ஆவணங்களைக் குறிப்பிடப்பட்ட கொழும்பு விலாசம் ஒன்றுக்கு அனுப்பியுள்ளார். அவர்கள் குறிப்பிட்ட தொகையை தனது வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு, வங்கிச் செயலியில் கணக்குமீதியை ஸ்கீரின் சொட் எடுத்தும் அனுப்பியுள்ளார். இந்தநிலையில் கடந்த 27ஆம் திகதி குருநகரைச் சேர்ந்தவரது கைபேசி இலக்கம் செயலிழந்துள்ளது. சிலநாள்களின் பின்னர் வங்கிக்குச் சென்று தனது கணக்கு மீதியைச் சரிபார்த்தபோது, அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. வங்கிக் கணக்கில் இருந்த 65 இலட்சம் ரூபாவும் காணாமல் போயிருந்த நிலையில், யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவில் அது தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான பொலிஸ் குழு இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்தது. விசாரணைகளின் அடிப்படையில் பெண் ஒருவர் உட்பட இருவர் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளில் அதிர்ச்சிகரமான தகவல்கள் பொலிஸாருக்குத் தெரியவந்துள்ளன.

பிரிட்டனில் உள்ள ஒருவருடைய சகோதரன் இங்குள்ளவர்களிடம் மோசடியாகப் பணத்தைப் பெற்று அதை உண்டியல் முறைமூலம் பிரிட்டனுக்கு அனுப்பி வந்துள்ளார். உச்சபட்சமாக இதுவரையில் 3 கோடி ரூபா வரை உண்டியல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. இவ்வாறான மோசடிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்திருக்கலாம் என்று பொலிஸார் தற்போது சந்தேகிக்கின்றனர். அத்துடன் இன்னும் பலர் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-26)

## தமிழ்த்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காலம்முதல் தமிழ் மக்களுக்காக உணர்வுபூர்வமான அரசியலை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றேன். என்னைத் தமிழ் மக்களின் பிரதிநிதியாக தமிழ்ப் பொதுவேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டமையை தமிழ்த் தேசியத்தின் கொள்கைக்காக எனக்கு வழங்கப்பட்ட குறியீடாகவே பார்க்கின்றேன்.

தமிழ் மக்கள் சிறிலங்கா அரசாங்கத்தால் காலத்துக்கு காலம் ஏமாற்றப்பட்டு வருகின்ற நிலையில் தமிழ் மக்களின் நிலைப்பாடு தொடர்பில் சிறிலங்கா அரசாங்கத்துக்கும் சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் தேர்வில் நானும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் பெயர்களும் இறுதித் தேர்வில் காணப்பட்டன. நானும் தவராசாவும் நெருங்கிய நண்பர்கள். இருவரில் யார் வந்தாலும் பரவாயில்லை. இணைந்து வேலைத்திட்டங்களைச் செய்வதாக முன்னரே பேசியிருந்தோம். நான் ஜனாதிபதி வேட்பாளராக பொருளாதாரத்தை முன்னேற்றவோ அல்லது இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்போகிறேன் எனக் கூறியோ வாக்குக் கேட்க வரவில்லை.

தமிழ் மக்களின் தீர்க்கப்படாத நீண்டகால இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. மற்றும் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு கிடைக்கப் பெறவில்லை என்பதை தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலம் சர்வதேசத்துக்கும் சிறிலங்கா அரசாங்கத்துக்கும் வெளிப்படுத்துவதற்காகவே களமிறங்கியுள்ளேன்.

தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து தமது இருப்புகளைத் தக்க வைத்தனர். அதன் பின் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின் தேர்தல் ஜனநாயகத்தை கையில் எடுத்து, தலைவர் பிரபாகரன், செல்வநாயகம், சம்பந்தன் போன்றோர் என்ன நோக்கத்துக்காகச் செயற்பட்டார்களோ அந்த நோக்கத்தில் இருந்து விலகவில்லை என்பதை எடுத்துக்காட்டவேண்டும்" - என்றார். (அ-ஒ-20)

## ஏழைகளின்...

அன்று உணவு வழங்க முடியாமல், பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முடியாமல் இந்த நாட்டின் தாய்மார்கள் அனுபவித்த துன்பங்களை யாரும் மறந்துவிடக்கூடாது. இன்று மேடைகளில் தேசப்பற்றையும், மக்களின் துன்பங்களையும் பேசும் தலைவர்கள் சவாலுக்கு முகம்கொடுக்க முடியாமல் தப்பித்து ஓடியதை இந்த நாட்டு மக்கள் மறக்கமாட்டார்கள் என்றும் ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

பெண்கள் எமது பலம் என்ற தொனிப் பொருளில், கொழும்பில் நேற்று இடம்பெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நான் ஏன் கட்சி சார்பற்ற வேட்பாளராக போட்டியிடுகிறேன் என்று பலர் என்னிடம் கேட்கிறார்கள். பசி கட்சி சார்பற்றது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் பசி உணரப்படுகின்றது. வயிற்றைப் பட்டினி இன்றி நிரப்புதலே தர்மம். எனவே, அரசியல் கட்சி நிற பேதங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, நாட்டு மக்களின் வயிற்றை நிரப்ப ஒன்றிணையவேண்டும். இந்நாட்டு மக்கள் படும் துன்பங்களை நான் நன்கு புரிந்து கொண்டுள்ளேன். மின்சாரம் இல்லாமல், எரிபொருள் இல்லாமல், உணவு இல்லாமல், பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முடியாமல் நீங்கள் அனைவரும் பெரும் சிரமத்தை எதிர்கொண்டீர்கள்.

நாம் மீண்டும் இந்தத் துன்பத்தை சந்திக்க வேண்டுமா? அந்த நிலைமை ஏற்படாமல் தடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். ஏனையவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்காமல் ஓடியதால்தான் நான் ஜனாதிபதியானேன். நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் சஜித் மற்றும் அநுர ஆகியோரிடம் 'இந்த சிரமங்களிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கு ஒன்றிணைந்து செயற்படுவோம்' என்று கோரிக்கை விடுத்தேன். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டனர். நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற அவர்கள் எங்களை ஆதரிக்கவில்லை. அதன்போது, எனக்கு மூன்று பெண்கள் ஆதரவு வழங்கினர். இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஜெனட் யெலன், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா ஆகிய மூவருமே அந்தப் பெண்கள்" - என்றார். (அ-ம)

## அமைச்சுப்...

ஆதரித்திருந்தார். இதனால் அவருடைய கட்சி உறுப்புரிமை பறிக்கப்பட்டது. இதையடுத்து அமைச்சர் ஹரின் நீதிமன்றத்தை நாடியிருந்தார். நீதிமன்றமும் நேற்று வழங்கிய தீர்ப்பில் ஹரினை கட்சியில் இருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த நடவடிக்கையில் தவறில்லை என்று குறிப்பிட்டிருந்தது. இதனால், நாடாளுமன்ற உறுப்புரிமையை இயல்பாகவே இழக்கவேண்டிய நிலைக்கு ஹரின் தள்ளப்பட்டார். இதையடுத்தே அவர் அமைச்சுப் பதவியைத் துறப்பதாக அறிவித்தார்.

"எனக்கு வழங்கப்பட்ட அமைச்சுப் பதவியை வெற்றிகரமாக செய்துமுடித்துள்ளேன். சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது, உறுமய காணி உரித்துப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது, எனவே, கவலையுடன் அல்ல, மகிழ்ச்சியுடன்தான் அமைச்சுப் பதவியில் இருந்து விடைபெறுகின்றேன். சஜித்துடன் எனக்கு தனிப்பட்ட பிரச்சினை கிடையாது, அவர் ஜனாதிபதியானால்கூட பரவாயில்லை. ஆனால், அவர் சவாலை பொறுப்பேற்காமை தொடர்பிலேயே எனக்கு பிரச்சினை உள்ளது" என்று ஹரின் தெரிவித்தார். (அ-ஒ-44)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில்
112 பரப்புக் காணியில் 14 பரப்பு
காணி மட்டுமே விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- **A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் (2 வது காணி).**
- **20 அடிப்பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.**
- **குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.**
- **நன்னீர் ஊற்று சூழல்.**
- **ஒரு பரப்பின் விலை 5 1/2 இலட்சம் (550000/=)**
- **தரகர் தேவையில்லை**

**பார்வையிடும் நேரம்:**

**காலை 6 மணி தொடக்கம் மாலை
6 மணி வரை.**

(CS 1107) V-1

தொடர்புகளுக்கு:

ஜெயம் 077 814 7389
077 986 5457

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சார கட்டணத்திலிருந்து விடுதலை

சீனா(China) மற்றும் இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட சூரிய விளக்குகள் (Solar Lights) வீட்டுத் தெரு, முற்றம், தோட்டம் ஏனைய இடங்களிற்கும் பொருத்துவதற்கு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் பொருத்தியும் தரப்படும்.

**விலை 7000 ரூபாவிலிருந்து**



**ஆர்க் . என் . கம்பனி**



- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ் . 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

**N5 எலக்ரிக்கல்ஸ்**

- 77, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 312 7895

**Hotline : 071 535 7799/ 071 554 7973**

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 10 . 1937



மறைவு 05 . 08 . 2023

### பார்வதி அமிர்தலிங்கம்

யாழ். மத்தொனி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், ஆலடி, கரணவாய் மற்றும் கனடா Calgary யை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. பார்வதி அமிர்தலிங்கம் கடந்த (05.08.2024) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - இலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், தவமலர், வானதி, தேவகி, சுமதி, சுகந்தி, காலஞ்சென்றவர்களான தவலிங்கம், ரஞ்சிதமலர், ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்ரனி, தர்மகுமார், சுதாகரன், அரவிந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிந்தி, அபிலா, கீர்த்திகன், வித்தி, ஷியாம், சாங்கவி, பவித்ரா, ஷாமிலி, நிது, அரண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், கந்தசாமி, காலஞ்சென்றவர்களான அம்மா, யோகம், தேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.08.2024) சனிக்கிழமை அந்திரான், நெல்லியடியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியை நாளை (11.08.2024) ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்று சோனப்பு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்:
குடும்பத்தினர்

(CS/55891) J-1

## விற்பனைக்கு

Audi Q2 (2018) ம் ஆண்டு கார் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:
**076 693 2227**

## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
**074 173 7684**

(CS/9881) J-1

## கடைகள் வாடகைக்கு

பருத்தித்துறை வீதியில் சட்டநாதர் கோவில் முன்பாக கடைத் தொகுதிகள் வாடகைக்கு உண்டு

தொடர்பு: **075 045 3385**
**021 222 9229**

## காணி விற்பனைக்கு

- கொழும்புத்துறை விதானையார் வீதியில்
- 2 1/2 பரப்புக் காணி 4 பக்கமும் சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு.
- 1 1/4 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும்
- சிறந்த சுற்றுச் சூழல்
- நல்ல நீர் ஊற்று
- A9 வீதி 7 நிமிடம்
- கச்சேரி 10 நிமிடம்
- சுண்டுக்குழி, சென் ஜோன்ஸ் பாடசாலைகள் 7 நிமிடம்

தரகர் தேவையில்லை.
காணி உரிமையாளர்
**076 659 0583, 077 612 2971**

- யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான வீதியில் காப்பற் வீதி முகப்பு 200 அடியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- எந்தவொரு வியாபார நோக்கத்திற்கும் சிறந்த காணி.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

காணி உரிமையாளர்
**076 659 0583, 070 575 8086**



## குருதிக்கொடை முகாம்

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கத்தோடு அமரர் சங்கரின் நினைவாக மன்னார் றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில், கழகத் தலைவர் திருமலைராசா தனேஸ் தலைமையில் மன்னார் ஆகாஷ் தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று வெள்ளிக் கிழமை குருதிக்கொடை முகாம் நடைபெற்றது. 40 க்கும் மேற் பட்ட குருதிக்கொடையாளர்கள் குருதி வழங்கினர். (ச–25,213)

## விளையாட்டுப் போட்டி

ஊரெழு கலைவாணி முன்பள்ளி நடத்தும் விளையாட்டுப் போட்டி சி.இளங்கோ தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி.கந்தையா சர்வேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், யாழ்.ஊரெழு கணேச வித்தியாசாலை அதிபர் இரா.ஜெயக்குமார், யாழ்.பீப்பிள் லீசிங் முகாமையாளர் க.கமலகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், ஜே/267 கிராம உத்தியோகத்தர் ம.ஞானேந்திரன், கோப்பாய்க் கோட்ட இணைப்பாளர் ப.நாகேஸ்வரி, ஊரெழு குடும்பத்தலைவி ச.மிரிகா ஆகியோர் விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி)

## விண்ணப்பம் கோரல்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் இவ்வருடத்துக்குரிய தேசிய இளைஞர் விருதுப்போட்டிக்குத் தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் தத்தமது மாவட்டச் செயலகம் அல்லது பிரதேச செயலகம் ஆகியவற்றின் கலாசார அலகுகளில் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவித்துள்ளனர்.

ஓவியம், சிலை, சிற்ப வேலைகள் மற்றும் இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

(ச–45–9)

## பிரத்தியேக வகுப்புக்கள்

விஞ்ஞானம் 6-10, விவசாய விஞ்ஞானம், Btec
தமிழ், English medium
வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

**077 597 2153**

(CS/55885) J-1

## கோழி முட்டை மலிவு விலையில்

1 Kg இறைச்சி - 1000/=
முட்டை - 35/=

**நியூ சிற்றி கோழிக் கடை**
**கோழி பாம்**
குருநகர் மார்க்கட் முன்பாக
யாழ்ப்பாணம்.

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் உள்ள பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- வரவேற்பாளர் (Receptionist)
- Accountant
- Cashier
- Cook
- விற்பனைப் பிரதிநிதி (Sales Rep)
  (Driving License வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது)
- DRIVER
- Electrician
- Kitchen Helper
- Waiter
- Room Boy
- House Keeping

25- 35 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
**ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**

தொடர்பு: **076 012 0283**

(CS 1105) V-1

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 300 M தூரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு குறுகியகாலத்திற்கு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**071 443 2989**

## காணி விற்பனைக்கு

**கைதடி - நவபுரம் வீதி முகப்புடன் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. ஆவணங்கள் அனைத்தும் சட்டரீதியாக 100% சரியாக உள்ளன.**

- நன்னீர் வசதி உண்டு.
- சிறந்த சுற்றுச் சூழல்.
- 1 பரப்பு - 8 லட்சம் ரூபா.

விலை நேரில் பேசித்தீர்மானிக்கலாம்
மேலதிக விபரங்களுக்கு :-
**076 659 0583, 077 612 2971**

(CS 55898) V-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.08. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.